# உதயன்

சுடர் : 37
கதிர் : 339

திங்கட்கிழமை
31 ஒக்ரோபர் 2022

ஐப்பசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50


## உணவு வகைகளின் விலை குறைப்பு

கொழும்பு, ஒக். 31
தேநீர் மற்றும் மேலும் சில உணவு வகைகளின் விலைகளை, நாளை முதல் 10 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச் 12 ➤

# வடக்கு மாகாணமே இலங்கையின் போதைப்பொருள் விநியோக மையம்



### யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 31

இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் உயிர்கொல்லி போதைப்பொருளைக் கடத்துகின்ற - விநியோகிக்கின்றமையமாக வடக்கு மாகாணம் மாறியுள்ளது - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். 11 ➤

## மனோ - திகா - ஜீவன் ஒரே மேடையில் சங்கமம்

### மலையக அரசியல் தலைமைகள் ஒரே குடையின் கீழ் பயணம்?

நுவரெலியா, ஒக். 31
மலையக மறுமலர்ச்சிக்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டமே அவசியம். அதற்கான ஆரம்பமே இது. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எனக்கு சிறந்த வழிகாட்டியாகவுள்ளார். திகாம்பரம் எனது மூத்த சகோதரன் போன்றவர் என்று 11 ➤

## தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது அரசாங்கம்

### டலஸ் அழகப்பெரும சாடல்

கொழும்பு, ஒக். 31
ஈரானில் இருந்த அழுக்கு மனிதன் குளிப்பதற்கு அஞ்சியதுபோல, தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசாங்கமும் அஞ்சுகின்றது. ஆனால், ஈரான் மக்கள் ஒன்றுகூடி அழுக்கு மனிதனை குளிப்பாட்டியது 10 ➤



## அமெரிக்காவும் இலங்கையும் பிரிக்க முடியாத பங்காளிகளாம்

### ஜனாதிபதி ரணில் புகழ்மாலை

கொழும்பு, ஒக். 31
அமெரிக்காவும் இலங்கையும் பிரிக்க முடியாத பங்காளிகளாக, சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் முன்னோக்கிச் செல்கின்றன - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 12 ➤

## கொட்டும் மழைக்குள்ளும் நடந்தேறிய சூரன்போர்



படம் - ஐ. சிவசாந்தன்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சூரன்போர் பல ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் கொட்டும் மழைக்குள்ளும் நேற்று மாலை சிறப்பாக இடம்பெற்றது. அதேபோன்று வடக்கிலுள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களில் மழை பெய்து கொண்டிருந்த நிலையிலும் சூரன் போர் நடைபெற்றது. **(மேலும் படங்கள் 10 ஆம் பக்கத்தில்)** (அ-ஓ-5)

## சுமந்திரனை எதிர்க்கும் சிறீதரனின் முடிவு சரியே!

### ஆதரவு தெரிவிக்கிறார் கே. வி. தவராசா

யாழ்ப்பாணம், ஒக். 31
சுமந்திரனின் தன்னிச்சையான முடிவால் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. சுமந்திரன் எடுக்கும் முடிவுகளை எதிர்ப்போம் என்ற சிறீதரனின் கருத்தை நான் ஆதரிக்கின்றேன் 11 ➤

## கரைவலை இழுத்தவரை காவு கொண்டது கடல்!

முல்லைத்தீவு, ஒக். 31
முல்லைத்தீவு - கருநாட்டுக்கேணி கடற்கரையில் கரைவலைத் தொழில் செய்துவரும் 23 வயதுடைய தொழிலாளி ஒருவர், கடலில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் காலை, கயிற்றை இழுத்தவேளை அவர் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் 11 ➤

## 36 ஆயிரம் தொன் உரம் யு.எஸ்.எயிட் வழங்கும்

### விவசாய அமைச்சு தகவல்

கொழும்பு, ஒக். 31
நெல் உற்பத்திக்குத் தேவையான 36 ஆயிரம் மெற்றிக் தொன் திண்ம உரத்தை எதிர்வரும் சிறு போகத்துக்கு பெற்றுத் தருவதற்கு யு.எஸ்.எயிட் அமைப்பு இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
(அ-ஓ-இ)

சூழலியத்துக்கு எதிரான

## கடலட்டைப் பண்ணையை நாம் நிராகரிக்கவேண்டும்


### தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
இந்தியா, சீனா என்ற இரு நாடுகளையும் தாண்டியும் எமது மண்ணுக்கும் சூழலியலுக்கும் எதிரான திட்டங்களை ஒற்றுமையாக நாம் நிராகரிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் 12 ➤

## பருத்தித்துறை கடற்பரப்பில் கடல் நீர் வான்நோக்கி ஈர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று முற்பகல் 10 மணியளவில் திடீரெனக் கடல் நீர் வான் நோக்கி இழுக்கப்பட்டதால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. 12 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கோழிகளுக்கு விஷம்: 35 கோழிகள் இறப்பு!

ஆனைக்கோட்டையில் இழிசெயல்

யாழ்ப்பாணம், ஒக். 31
ஆனைக்கோட்டை முள்ளிப் பகுதியில் 3 குடும்பங்களின் 35க்கும் மேற்பட்ட கோழிகள் விஷம் வைத்து கொல்லப்பட்டுள்ளன என்று அவற்றின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
வயல் நிலமொன்றுக்குள் மேய்ச்சலுக்காகச் சென்ற கோழிகள் உயிரிழந்த நிலையில் ஆங்காங்கே இறந்து கிடந்துள்ளன. இதனால் அவை விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கோழிகளின் உரிமையாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்த இழிசெயலால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் கவலையும் தெரிவித்துள்ளனர். (ச-27)

## முப்படைகளின் கண்காணிப்பை மீறி
# வடக்கில் எவ்வாறு போதைப்பொருள்?




கொழும்பு, ஒக். 31
**முப்படையினரதும் பொலிஸாரினதும் 24 மணிநேர முழுநேரக் கண்காணிப்புக்குள் இருக்கும் வடக்கு மாகாணத்துக்குள் போதைப்பொருள்கள் எந்த வழியால் வருகின்றன? இவ்வாறு கேள்வி எழுப்பினார் முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன.**

'போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணம் கல்வியில் மட்டும் இன்னமும் வீழ்ச்சியடையாமல் வீறுகொண்டு பயணிக்கின்றது. இந்தநிலையில், வடக்கில் பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் கூட தற்போது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றார்கள் என்ற செய்தி மிகவும் மனவருத்தத்தைத் தருகின்றது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார். வடக்கில் இளையோர் சமூகத்தைக் குறிவைத்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் பெரும் புள்ளிகளைக் கண்டுபிடிக்க அனைத்து மட்டங்களிலும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வடக்கிலுள்ள இளையோர் சமுதாயத்தைப் போதைப்பொருள் பாவனையில் இருந்து மீட்டெடுக்க பெற்றோர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ம-22)

## மின் மோட்டர் திருட்டு: சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 31
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் பகுதியில் மின் மோட்டர்களைத் திருடிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாகவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைதான சந்தேக நபர்கள் 28, 30, 34 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-125)



## காரைநகரில் வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் ஜே/44 கிராம அலுவலர் பகுதியில் நேற்று முன்தினம் வெடிபொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. காணியின் உரிமையாளர் குறித்த பகுதியில் வீடு கட்டுவதற்காக அத்திபாரம் வெட்டியவேளையிலேயே குழி ஒன்றிலிருந்து மேற்படி வெடிபொருள் அவதானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு வெடிபொருள் மீட்கப்பட்டது. (ச-27)

## சிறுமியுடன் தாம்பத்தியம்: இளைஞனுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஒக். 31
15 வயதேயான சிறுமியுடன் குடும்பமாக வாழ்ந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 20 வயதுடைய இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கல்வியங்காடு பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டு, பிரான்ஸில் வசித்து வந்த இளைஞனுக்கும், அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமிக்குமிடையே காதல் ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்த அந்த இளைஞர் குறித்த சிறுமியை அவரின் பெற்றோரின் பாதுகாப்பில் இருந்து அழைத்துச் சென்று குடும்பமாக வாழ்ந்து வந்துள்ளார்.
இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு, குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார். இதையடுத்து அந்த இளைஞனை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை நாளைவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-27)

## புதையல் தோண்ட முற்பட்டோர் கைது

முல்லைத்தீவு, ஒக். 31
ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட சம்மளங்குளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட சந்தேகத்தில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர். ஒட்டுசுட்டான் சிவநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-19)



## மாவீரர் துயிலுமில்லங்களில் துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக். 31
கிளிநொச்சி தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றையதினம் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
மாவீரர் நிகழ்வு ஒழுங்கமைப்புக் குழு, மாவீரர்களின் பெற்றோர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு இந்தத் துப்புரவுப் பணிகளை முன்னெடுத்தனர். (ம-113)

## சிறுநீரக நோயாளிகள் முல்லைத்தீவில் அதிகரிப்பு
## குடிதண்ணீரே காரணம் என்கிறது சுகாதாரத்துறை!

முல்லைத்தீவு, ஒக். 31
முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதற்கான பிரதான காரணம் அங்குள்ள நிலத்தடித் தண்ணீர் என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.
முல்லைத்தீவில் வருடந்தோறும் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. குறிப்பாக மாவட்டத்திலுள்ள வெலிஓயா, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் அதிகரித்த சிறுநீரக நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இதற்கான காரணம் இங்குள்ள நிலத்தடித் தண்ணீரில் காணப்படுகின்ற உலோகங்கள் என்று சுகாதாரத்துறை சுட்டிக்காட்டியுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வாராந்தம், மாதாந்தம் யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம் மருத்துவமனைகளுக்கு கடும் சிரமங்களுக்கு மத்தியில் குருதி சுத்திகரிப்பு சிகிச்சைக்கு சென்று வருகின்றனர். எனவே இந்தப் பிரதேசங்களில் உள்ள



மக்களை சிறுநீரக நோயிலிருந்து பாதுகாக்க வேண்டுமெனில் குடிப்பதற்குகந்த தண்ணீரை வழங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-14-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்துடன் நவம்பர் 3இல் பேச்சு

## அரசாங்கம் அறிவிப்பு

**கொழும்பு, ஒக். 31**

**கடன் வழங்குநர்களுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான அடுத்தகட்டப் பேச்சு எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.**

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் மூவரடங்கிய குழுவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன் போதே சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்தகட்டப் பேச்சை எதிர்வரும் 3ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் போது இலங்கை கடன் மறுசீரமைப்பு மற்றும் கடன் வழங்குநர்களின் மாநாடு என்பன தொடர்பிலும் விரிவாக ஆராயப்படவுள்ளது. பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்கவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். (ச-இ)

---

### மசகு எண்ணெய் கப்பலுக்கு ஒன்றரை லட்சம் டொலர் தினமும் தாமதக்கட்டணம்

கொழும்பு, ஒக். 31

கடந்த 40 நாள்களாக கடலில் நிறுத்தி வைக்கப்பட்ட மசகு எண்ணெய் கப்பலுக்கு நாள்தோறும் ஒன்றரை லட்சம் டொலர் தாமதக்கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

97 ஆயிரம் மெற்றிக் தொன் அடங்கிய மசகு எண்ணெய் கப்பல் கொழும்பு துறைமுக கடற்பரப்பில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலுக்கு இதுவரையான காலப்பகுதிக்கு 60 மில்லியன் அமெரிக்க டொலர் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது

மசகு எண்ணெய் இல்லாமையால் சபுகஸ்கந்த எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த 7ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

இந்த மசகு எண்ணெய் கப்பலை விடுவிக்க 70 மில்லியன் டொலர் செலுத்த வேண்டிய நிலையில் தாமதக் கட்டணம் பெருமளவில் செலுத்துவதற்கு இடமளிப்பது தவறாகும்.

இதுதொடர்பில் உடன் விசாரணை மேற்கொள்ளவேண்டும் என பெற்றோலிய நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன. (ச-இ)

---

### ரஞ்சன் ராமநாயக்கா அமெரிக்கா பயணம்

கொழும்பு, ஒக். 31



பிரபல சிங்கள திரைப்பட நடிகரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்கா, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

முன்னதாக, வெளிநாடு செல்ல ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விதிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தடை காரணமாக விமான நிலையத்தின் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் அவருக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கவில்லை.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நீதிமன்றத் தடையை நீக்கி நேற்று அவர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். ரஞ்சன் ராமநாயக்க நடித்து வெளியாகி ஓடிக்கொண்டிருக்கும் 'த கேம்' என்ற சிங்கள திரைப்படம் அமெரிக்காவில் திரையிடப்படவுள்ளது. அது தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே அமெரிக்கா சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-14,இ)

---



### தொலைக்காட்சியில் விரிவுரை; ஆசிரிய வளவாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சிகள் மூலம் விரிவுரையாற்றிய வடக்கு மாகாண ஆசிரிய வளவாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கே.பத்மஸ்ரீ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிறப்புரையை தேசிய கல்வி நிறுவகத்தின் இலத்திரனியல் விரிவாக்கற்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஸ்ரீபிருந்திரன் நிகழ்த்தினார். (ச)

---

### பெரமுனவிலிருந்து விலகி ஐ.தே.க.வில் இணையேன்

*பிரசன்ன ரணதுங்க வெளிப்படை*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தாலும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எண்ணம் எனக்கு இல்லை என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரம சிங்க இருந்தாலும் ஜனாதிபதி என்ற ரீதியில் அவரை நான் ஆதரிக்கின்றேன். அதற்காக சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து நான் விலகிவிட்டேன் என்று தவறாக அர்த்தம் கொள்ளக்கூடாது.- என்றுள்ளது. (ம-14,22)

---

### ஐரோப்பிய நாடாளுமன்றில் இலங்கை நண்பர்கள் குழு!

கொழும்பு, ஒக். 31

ஐரோப்பிய நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தும் 'இலங்கை நண்பர்கள் குழு' கடந்த செவ்வாய்க்கிழமை பிரஸ்ஸல்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

ஐரோப்பிய மக்கள் கட்சியை பிரதிநிதித்துவப்ப டுத்தும் செக் குடியரசின் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் தோமஸ் ஸ்டெச்சோவ்ஸ்கி இந்தக் குழுவுக்கு தலைவராகவும் ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த மக்சிமிலியன் குழுவின் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ள னர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் இலங்கை யின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய இலங்கை உறவுகளின் நிலை ஆகியவை குறித்து 'இலங்கை நண்பர்கள் குழு' ஐரோப்பிய ஒன்றிய இலங்கைக்கான தூதுவர் ஆசிர்வாதம் விளக்க மளித்தார்.

அத்துடன் இலங்கைக்கும் ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இந்தக் குழு செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

---

# தாக்குதலுக்கு உதவியோரை விடுவிப்பதே எனது விருப்பம்



## சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.31

என்னைக் கொலை செய்ய முற்பட்டவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களை சிறையிலடைத்து வைத்திருப்பதால் எனது கண் மீளக் கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கு தண்டனை வழங்கி 8 ஆண்டுகள் கடந்தபோதே, அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்தது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அண்மையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

என்னைக் கொலை செய்ய முற்பட்ட சந்தேகநபருக்கு கொழும்பு கொட்டாஞ்சேனை ஆலய பூசகர் ஒருவரும் அவரது மனைவியும் உதவினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

20 ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளனர். அவர்கள் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர் என்பதற்காக என்னுடைய கண் எனக்கு மீளக் கிடைக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டப் போவதுமில்லை.

அவர்கள் சிறையிலடைக்கப்பட்டு சுமார் 8 ஆண்டுகள் கடந்தபோதே அப்போதைய ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோருவதற்கு எண்ணியிருந்தேன்.

அண்மையில் ஜனாதிபதியின் செயலர்ள் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தத் தீர்மானம் தொடர்பில் தெரிவித்தார். அவர் என்னிடம் கேட்ட அந்த சந்தர்ப்பத்திலேயே நான் சரி என்று பதிலளித்தேன்.

அந்தத் தீர்மா னத்தை நான் விரும்புகின்றேன் என்று அவரிடம் தெரிவித்தேன்.

அவர்களுக்கு புனர்வாழ்வளித்தேனும் , அவர்கள் செய்த செயல் தவறு என்பதை உணர்த்தவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். என்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சில தினங்களின் பின்னர் உரையாற்றும் போதும், பதவிப் பிரமாண உரையின் போதும் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த இளைஞர், யுவதிகள் எம்முடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தேன் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை?

## கேள்வி எழுப்புகிறார் ரோஹித



**கொழும்பு, ஒக். 31**

**இலங்கையின் 25 மாவட்டங்களிலும் சுதந்திரமாக வாழும் தமிழ் மக்களுக்கு உண்மையில் என்ன பிரச்சினை உண்டு? தேசிய இனப்பிரச்சினை என்று அவர்கள் எதைக் கூறுகின்றார்கள்?**

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ராஜபக்சக்களின் சகாவான பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் கேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் நாடகம். அதனால்தான் நான் உள்ளிட்ட பெரமுனவின் ஒரு தொகுதியினர், அந்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. 22 ஆவது திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பு விவகாரத்தை வைத்துக்கொண்டு பெரமுனவுக்குள் பிளவு என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

பெரமுன அரசு இன்னமும் எழுச்சியுடன் பயணிக்கின்றது. தேர்தல் ஒன்று நடந்தால் அது நிரூபணமாகும். தமிழர் தீர்வுக்கான முதல் படியாகவே 22 ஆவது திருத்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உண்மையில் நான் கேட்கின்றேன் தமிழர்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை உண்டு? தேசிய இனப்பிரச்சினை என்று அவர்கள் எதைக் கூறுகின்றார்கள்? தீர்வு என்று அவர்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள்?

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள்; அனைத்து மாவட்டங்களிலும் அவர்கள் வசிக்கின்றார்கள். ஆனால், இந்தச் சுதந்திரம் சிங்களவர்களுக்கு இல்லை. வடக்கு - கிழக்கில் சிங்களவர்கள் சுதந்திரமாக வழிபடக் கூடிய நிலைமைகூட இல்லை - என்றார்.

(எ-22)

## இரட்டைக் குடியுரிமையை கைவிடமாட்டாராம் பஸில்

கொழும்பு, ஒக்.31

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச, இரட்டைக் குடியுரிமையைக் கைவிடும் நிலைப்பாட்டில் இல்லை என்று பெரமுனவின் முக்கியஸ்தரும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றதாலேயே 22 ஆவது திருத்தம் மீதான விவாதத்தில் பங்கேற்கவில்லை. நான் நாட்டில் இருந்திருந்தால் நிச்சயம் ஆதரவாக வாக்களித்திருப்பேன். ஏனெனில் 19 ஆவது திருத்தம் மீண்டும் வரவேண்டும் என எமது கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச வலியுறுத்தியிருந்தார்.

இரட்டை குடியுரிமைத் தடையால் எமக்கு எந்த விதப் பிரச்சினையும் இல்லை. 22 ஆவது திருத்தம் வரும்போது அது தொடர்பில் பஸில் ராஜபக்சவிடம் கலந்துரையாடினேன். இதன்போது, இரட்டைக் குடியுரிமையைக் கைவிடும் முடிவை நான் தற்போது எடுக்கப்போவதில்லை, அதனால் 22 தொடர்பாக நீங்கள் முடிவை எடுங்கள். இது விடயத்தில் என்னைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என பஸில் ராஜபக்ச குறிப்பிட்டார்.

இரட்டைக் குடியுரிமை இருந்தபோதுதான் முக்கியமான தேர்தல்களை பஸில் ராஜபக்ச வழிநடத்தினார். தற்போதும் வழிநடத்துகின்றார். மக்கள் போராட்டத்தை சிலர் சந்தர்ப்பவாத அரசியலுக்கு பயன்படுத்திக்கொண்டனர். எமது தரப்பிலும் சில தவறுகள் இருந்திருக்கலாம். அவற்றை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்வோம் - என்றார்.

(எ-இ)

## வெள்ளிக்கிழமை சைக்கிள் புதிய திட்டம் நடைமுறை

கொழும்பு, ஒக்.31

நகர அபிவிருத்தி அதிகாரசபை தங்களது ஊழியர்கள், வாரத்துக்கு ஒருமுறை சைக்கிளில் பணிக்கு வருவதற்கான சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வரும் 'உலக நகரங்கள் தினத்தை' குறிக்கும் வகையில் இந்தத் திட்டம் தொடங்கப்படவுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சைக்கிள்களைப் பயன்படுத்தி வேலைக்குச் செல்ல வேண்டும். சைக்கிள்களை வாங்குவதற்கான நிதி மற்றும் அவற்றை பாதுகாப்பாக நிறுத்த இட ஒதுக்கீடு உட்பட, சைக்கிளில் வேலைக்குச் செல்லத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தமது ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில், "வெள்ளி - சைக்கிளில் வேலைக்கு வாருங்கள்" நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு நவம்பர் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பத்தரமுல்ல செத்சிறிபாய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் நடைபெறவுள்ளது.

(எ-இ)

## தப்பியோடிய படையினருக்கு மன்னிப்புக் காலம் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.31

சட்டரீதியாக விலகாது படையிலிருந்து தப்பிச் சென்ற முப்படையினருக்கு சட்ட ரீதியில் சேவையிலிருந்து விலகிக் கொள்வதற்கான பொதுமன்னிப்புக் காலத்தை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி முதல், டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்தை பொதுமன்னிப்புக் காலகாமல் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை - கடந்த 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சேவையிலிருந்து சட்டரீதியில் விலகாமல் படையிலிருந்து சென்ற முப்படையினர் சேவையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிக் கொள்ளமுடியும். ஏதேனும் செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் இருப்பவர்கள் மாத்திரம் அதை வெளியேறுவதற்கு முன்னர் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

## சில பொருள்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, ஒக்.31

புறக்கோட்டை மொத்தச் சந்தையில் பருப்பு, வெள்ளை அரிசி உள்ளிட்ட பல பொருள்களின் விலைகள் குறைந்துள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன் 375 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பருப்பின் விலை 350 ரூபாவாகக் குறைந்துள்ளது. 290 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் மொத்த விலை 225 ரூபாவாகக் குறைந்துள்ளது என்று அத்தியாவசியப் பண்ட இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை நேற்றுமுன்தினம் 250 ரூபாவாகக் குறைந்துள்ளது. கோதுமை மாவின் விலை பல தடவைகள் குறைக்கப்பட்ட போதிலும், வெதுப்பக உரிமையாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களின் விலையை இதுவரை குறைக்கவில்லை.

நாட்டின் ஏனைய பாகங்களிலும் இந்த விலைக் குறைப்புக்கள் தாக்கம் செலுத்தவில்லை என்று நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

(எ-இ)

## லைசென்ஸ் அச்சிடும் பணி அடுத்தவாரம் ஆரம்பமாகும்

சாரதி அனுமதிப் பத்திரம் அச்சடிக்கும் பணி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக திணைக்களம் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதை இடைநிறுத்தி, குறைந்த எண்ணிக்கையிலான பத்திரங்களை மாத்திரமே வழங்கி வருகிறது.

அடுத்த வாரம் ஜேர்மனியில் இருந்து 5 லட்சம் அட்டைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

தற்போது 6 லட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன என்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

(எ-இ)

## கொரோனாக் கட்டுப்பாட்டை விலக்கிக்கொள்ளத் தீர்மானம்

கொழும்பு, ஒக்.31

டீசல் விலை குறைக்கப்பட்ட போதும் பஸ் கட்டணத்தை குறைக்க தடையாகவுள்ள 'கொரோனாக் கட்டுப்பாட்டு' சுற்றறிக்கையை நீக்குவதற்கு சுகாதார அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது என்று போக்குவரத்து அமைச்சகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக, ஆசன எண்ணிக்கைக்கு அமையவே பொதுப் போக்குவரத்து பஸ்களில் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என்று சுகாதார அமைச்சகம் விடுத்திருந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால், பஸ் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட 10 சதவீத கூடுதல் பஸ் கட்டணத்தை குறைக்க முடியவில்லை. [illegible]டும் பட்சத்தில் பஸ் [illegible]கொள்ள முடியும் என அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

(எ-இ)

## மின் கட்டணம் செலுத்த காலக்கெடு

கொழும்பு, ஒக்.31

அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு நிலுவையிலுள்ள மின் கட்டணங்களை செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல அரச நிறுவனங்களில் நிலுவையிலுள்ள மின் கட்டணங்களை வசூலிக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"அடித்து வீழ்த்தப்பட்டால் நீங்கள் தோற்கமாட்டீர்கள். கீழேயே இருந்தால் நீங்கள் தோற்றுவிடுவீர்கள்" - முஹம்மது அலி

## ஏனிந்தத் தட்டுப்பாடு?

'தேவையானளவு எரிவாயு கையிருப்பில் உள்ளது. அத்தோடு இன்னும் எரிவாயுக் கப்பல்கள் வரவிருக்கின்றன. இந்த வருடத்துக்குள் லிட்ரோ நிறுவனத்தின் சகல கடன்களும் கொடுத்து தீர்க்கப்பட்டு விடும். இப்போது நாம் நினைத்ததை விடவும் இலாபம் கிடைத்து வருவதால், நவம்பர் மாத முற்பகுதியில் எரிவாயு சிலிண்டர்களின் விலையை மீண்டும் குறைக்க இருக்கிறோம்' என்று லிட்ரோ நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது.

எந்த முகூர்த்தத்தில் அந்த நிறுவனம் இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டதோ தெரியவில்லை, அந்த அறிவிப்பு வந்த நாளில் இருந்து எரிவாயு சிலிண்டர்களுக்கு நாட்டில் மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எந்தக் கடையில் கேட்டாலும் 'காஸ் சிலிண்டர் இல்லை' என்பதே பொதுவான பதிலாகச் சொல்லப்படுகின்றது. தேவையானளவு எரிவாயு கைவசமுண்டு என லிட்ரோ நிறுவனம் அறிவித்த கையோடு, நாடெங்கும் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதென்பது புதுமையானதே.

ஆனால் இப்படி எரிவாயு சிலிண்டர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடானது இயற்கையானதல்ல. அது வர்த்தகர்களால் வலிந்து உருவாக்கப்பட்டது. நவம்பர் மாத முற்பகுதியில் எரிவாயுவின் விலையைக் குறைக்க உள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்தமைதான் இந்தத் தட்டுப்பாட்டுக்கான பிரதான காரணம். ஏனெனில் நவம்பரில் விலை குறையவுள்ளது என்று அறிவிக்கப்பட்டதால், பெரும்பாலான மக்கள் நவம்பருக்கு பின்னரே சிலிண்டர்களை கொள்வனவு செய்ய நினைப்பார்கள். அதனால் இப்போது தமது கடைகளுக்கு சிலிண்டர்களை பழைய விலையில் கொள்வனவு செய்தால், அவை விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்து, நட்டத்தை உண்டாக்கி விடுமென வர்த்தகர்கள் போட்ட 'லாப நட்டக் கணக்காலேயே' எந்தவொரு கடையிலும் எரிவாயு சிலிண்டரைப் பெறமுடியாத சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களுக்கான விலையேற்றங்கள், விலைகுறைப்புகள் என்பவற்றை அரசாங்கம் முற்கூட்டியே வெளியிடுவதில்லை. பெரும்பாலும் விலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முதல்நாளில் தான் அது பற்றிய அறிவிப்பை 'திடுதிப்பென' அரசாங்கம் வெளியிடும். அப்போதுதான் குறித்த பொருளை வர்த்தகர்கள் பதுக்கவோ அல்லது செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தவோ முடியாது. அதேபாணியில் லிட்ரோ நிறுவனமும் செயற்பட்டிருந்தால் இப்போதைய தட்டுப்பாடு வந்திருக்கப் போவதில்லை. மாறாக தன்னுடைய நிறுவனத்தின் தாராளத் தன்மையை முற்கூட்டியே பறைதட்டியதால், இப்போது மக்களை தேவையற்ற செயற்கைத் தட்டுப்பாட்டுக்குள் லிட்ரோ நிறுவனம் தள்ளி விட்டிருக்கிறது.

முன்னர்தான் டொலர் இல்லை, கப்பல் வரவில்லை, கையிருப்பில் இல்லை என்ற காரணங்கள் எரிவாயுத் தட்டுப்பாட்டுக்குச் சொல்லப்பட்டன. அதில் ஒரு நியாயமும் இருக்கவே செய்தது. ஆனால் இப்போதோ, கப்பல்கள் வந்தும், டொலர் இருந்தும், தேவையானளவு கையிருப்பு இருந்தும் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு உண்டாகியிருக்கிறதென்றால் அதன் அர்த்தம் என்ன? அரசாங்கத்தின் செயற்றிறனின்மை மட்டுமே அதற்குக் காரணம். விலைகளில் மாற்றம் செய்யும் உரிமையை நிறுவனங்களின் கையில் கொடுக்காமல், அதனைத் தன் கட்டுப்பாட்டுக்குள் அரசாங்கம் வைத்திருக்குமானால், இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க முடியும். ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் நொந்து நூலான மக்கள் மீது இவ்வாறான செயற்கைத் தட்டுப்பாடுகளைத் திணிக்க அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. அது மக்களுக்கும் நல்லதல்ல, அரசாங்கத்துக்கும் நல்லதல்ல. ஏனெனில் இவ்வாறான செயற்கைத் தட்டுப்பாடுகளால் கூட அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்தி கட்ட எதிர்ப்பலைகள் எழக்கூடும்.



# ராஜபக்சக்களால் இனி மீண்டெழுவே முடியாது

## சஜித் ஆவேசம்

**கொழும்பு, ஒக். 31**

**நாட்டை நாசமாக்கி, சாம்பலாக்கிய மொட்டுக் கட்சியினர், சாம்பல் மேட்டிலிருந்து மீண்டெழுவோம் என தற்போது கூளுரைக்கின்றனர். அவர்கள் என்னதான் ஆட்டம் போட்டாலும் அவர்களின் எழுச்சி மக்கள் கையில்தான் உள்ளது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முறையற்ற தீர்மானங்களால் முழு நாட்டையும் வங்குரோத்து அடையச்செய்து, நாட்டு மக்களையும் பாதாளத்துக்குள் தள்ளியவர்கள், நாட்டை சாம்பல் ஆக்கியவர்கள், சாம்பல் மேட்டில் இருந்து மீண்டெழுவோம் என கூளுரைக்கின்றனர். அவர்களின் மீள் எழுச்சி மக்களின் கைகளில்தான் உள்ளது என்பதை மறந்து விடக்கூடாது.

நாட்டு வளங்களை கொள்ளையடித்த, நாட்டை நாசமாக்கிய, தனது குடும்பத்தைச் செல்வந்தராக்கிய, இனவாதத்தைக் கையில் எடுத்தவர்களை, மக்கள் மீண்டெழ அனுமதிக்கமாட்டார்கள்.

அதேவேளை, நாட்டிலுள்ள அரசாங்கமும் வங்குரோத் தடைந்துள்ளது. அதனால் தான் மக்கள்மீது வரிச்சுமை திணிக்கப்படுகின்றது. எமது நாட்டில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட வளங்கள் மீள கொண்டுவரப்படும், சூறையாடப்பட்ட பணம், டொலர் மீளப்பெறப்படும். அதற்கான பொறிமுறை எமது ஆட்சியில் உருவாக்கப்படும்' -என்றார் (ம-44)

# ஐ.தே.க.வுடன் இணைவதற்கு விரும்புவோரை உள்ளீர்க்குக

## ஜனாதிபதி ரணில் உத்தரவு

கொழும்பு, ஒக். 31

சிறிலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பிரதான கட்சிகளில் இருந்து, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய விரும்புபவர்களை உள்ளீர்ப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்குமாறு கட்சித் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தின்போதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, தவிசாளர் வஜீர அபேவர்த்தன, செயலாளர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்டவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். இதன்போது சமகால அரசியல் நிலைவரம் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அவ்வேளையிலேயே ஐ.தே.க.வுடன் இணைய விரும்பும் பிரதான கட்சிகளின் அரசியல் பிரமுகர்கள், செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்களை உள்வாங்குவதற்கான வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு கட்சித் தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ம-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைகள் அட்டகாசம் பயன்தரு மரங்கள் அழிவு!

## யானைவேலி அமைக்குமாறு புதுக்குடியிருப்பு மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஒக். 31**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பில் பல கிராமங்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து வாழ்வாதாரப் பயிர்களை அழிக்கின்றன என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மல்லிகைத்தீவு, தேவிபுரம், கைவேலி உள்ளிட்ட பல கிராமங்களுக்குள் இரவுநேரங்களில் உட்புகும் யானைகள் தென்னை மரங்கள், வாழைகள், பலாமரங்கள் எனப் பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன.

தற்போது காலபோக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ள நிலையில் காட்டு யானைகள் கிராமங்களுக்கு படையெடுக்கின்றன. நீண்டகாலமாக யானைவேலி அமைத்துத் தருவதாக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டபோதும் இதுவரை சம்பந்தப்பட்ட தரப்பினரால் யானைவேலி அமைக்கப்படவில்லை.

கல்மடு தொடக்கம் இடைக்காடு வரையிலான 30 கிலோமீற்றருக்கு யானைவேலி அமைக்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் பின் அவை கைவிடப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன.

எமது வாழ்வாதாரப் பயிர்களை அழித்துவரும் யானைகளைக் கட்டுப்படுத்த, கைவிடப்பட்ட யானை வேலி அமைக்கும் திட்டத்தை துரிதப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-19)

# இயற்கை அழிப்பை வெளிப்படுத்திய ஊடகவியலாளருக்கு எதிராக முறைப்பாடு

முல்லைத்தீவு, ஒக். 31

முல்லைத்தீவு - மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் காடழிப்பு மற்றும் சட்டவிரோத மணலகழ்வு ஆகியவற்றை சுட்டிக்காட்டி செய்தி வெளியிட்டாரென ஊடகவியலாளர் ஒருவர் மீது மாந்தை கிழக்கு பிரதேசசெயலாளரால் கடந்த புதன்கிழமை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கின் மாபியாக்கள் என மக்களால் அறியப்பட்டோருக்கு பொலிஸ் பாதுகாப்புடன் அரசஅதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் துணைபுரிகின்றனர் என மக்கள் தெரிவித்த கருத்து, செய்தியாக கடந்த 7 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோத செயல் புரிவோருக்கு அரசஅதிகாரிகள் துணைபோகவில்லை. இதுதொடர்பில் ஆராயாது செய்தி வெளியிட்ட ஊடகவியலாளரை விசாரணைக்குட்படுத்த வேண்டும் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாந்தை கிழக்கு பிரதேசசெயலாளர் மற்றும் ஊடகவியலாளர் ஆகியோரை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இதன்போது செய்தியுடன் தொடர்பில்லாதவரை அழைத்து விசாரணை இடம்பெறுகிறது. மக்கள் தெரிவிக்கும் கருத்தை செய்தியாக்கம் செய்யும் ஊடகப் பணிக்கு இடையூறு ஏற்படுத்தப்படுவது கவலையளிக்கிறது என ஊடகவியலாளர் தெரிவித்தார்.

இந்த நிலையில் பத்திரிகை நிறுவனத்துடன் பொலிஸார் தொடர்பு கொண்டு பிரசுரமான செய்தி தொடர்பில் செய்தியாளரை அடையாளப் படுத்துமாறு கோரியுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு முறிப்பில் சட்டவிரோத தேக்கு மரங்கள் அறுக்கப்படுவது தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு அவர்களது ஒளிப்படக் கருவிகள் சேதமாக்கப் பட்ட சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-19)



# உழவியந்திரத்தில் கண்ணிவெடி!

மன்னார், ஒக். 31

கழிவுமணல் ஏற்றிச்சென்ற உழவியந்திரத்துக்குள் இருந்து கண்ணிவெடி ஒன்று கடந்த வியாழக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாந்தை- பாப்பாமோட்டைப் பகுதியில் இருந்து மன்னாரிலுள்ள சாவற்காடு மயானப் பகுதிக்கு கழிவுமணல் ஏற்றிச்சென்ற உழவியந்திரப் பெட்டிக்குள் மண்ணுடன் வெடிக்காத நிலையில் கண்ணிவெடி ஒன்று இருப்பது நபரொருவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து மன்னார் விஷேட அதிரடிப்படையினர் தலைமையில் கண்ணிவெடி செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,213)

# செம்மணி மயானம் மின் மயானமாக மாறும்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் - செம்மணி மயானத்தை மின்மயானமாக மாற்ற மயான பரிபாலனசபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக செம்மணி மயான பரிபாலன சபையின் தலைவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2010 ஆம் ஆண்டில் செம்மணி மயான பரிபாலனசபையின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு பொதுமக்கள், தொழில்முனைவோர், மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் 60 லட்சம் ரூபா செலவில் மயானம் புனரமைக்கப்பட்டது.

இதுவரை விறகையே எரிபொருளாகக் கொண்டு மயானம் இயங்கி வருகின்றது. தற்போது சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும், மரங்களை வெட்டுவதை நிறுத்தும் பொருட்டும், விறகுகளின் நாளாந்த விலையேற்றத்தைக் கணக்கிலெடுத்தும் செம்மணி மயானத்தை மின்மயானமாக மாற்றியமைப்பதற்கு மயான பரிபாலனசபை தீர்மானித்துள்ளது. இதற்கு பொது மக்களின் பங்களிப்பை பரிபாலனசபை மீண்டும் கோருகிறது - என்றுள்ளது. (ஒ-14,125)

# பனம் விதை நடுகை முல்லையில் ஆரம்பம்

பனை அபிவிருத்திச் சபை மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை பனம் விதை நடுகை செய்யப்பட்டது.

மழைக் காலங்களில் ஏற்படக்கூடும் வெள்ள இடரைத் தவிர்க்கும் முகமாக 35 ஆயிரம் பனம் விதைகள் இந்த செயற்றிட்டத்தின் மூலம் நடுகை செய்யப்படவுள்ளன.

நிகழ்வில் கரைத்துறைப்பற்றுப் பிரதேசசபை தவிசாளர் க.விஜிந்தன், பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர்.சசிகுமார், முல்லை கிழக்கு பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீண்டநாள் முயற்சி ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும். பணியிடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உறவினரால் உதவி உண்டாகும்.

**இடபம்:** பகைவர் தொல்லை அகலும். வியாபாரத்தில் இருந்த பிரச்சினையை சரி செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் ஆதாயம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தடைகளைச் சரி செய்து வெற்றி அடைவீர்கள் உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். தொழிலில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்:** உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**சிம்மம்:** குழப்பத்துக்கு இடமளிக்காதீர். திட்டமிட்ட செயல்கள் வெற்றியாகும். வேலைப்பளு அதிகரிக்கும். பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். நிதிநிலை உயரும்.

**கன்னி:** பணத் தட்டுப்பாட்டின் காரணமாக முயற்சி இழுபறியாகும். சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் காண முடியாமற் போகும்.

**துலாம்:** எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும். பணியாளர்களுக்கு புதிய பொறுப்பு வந்து சேரும். செல்வாக்கு உயரும். ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**தனுசு:** திட்டமிட்டு செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு உயரும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும்.

**மகரம்:** செயல்களில் நெருக்கடி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்களை சந்திக்க முடியாமற் போகும். சந்திராஷ்டமம் இருப்பதால் முயற்சி இழுபறியாகும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். உங்கள் திறமையால் எண்ணியதை அடைவீர்கள்.

**மீனம்:** பணியில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். நெருக்கடி விலகும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களை முழுமையாக மக்கள் நிராகரிக்க வேண்டும்!

சரத் பொன்சேகா வலியுறுத்து

**கொழும்பு, ஒக். 31**

**நாட்டு மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கு தாங்களே காரணம் என்பதை உணராது ராஜபக்சக்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவோம் என்று கூறுகின்றனர். ராஜபக்சக்களின் ஆட்சி அமைந்தால் இப்போதுள்ளதை விடவும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட் டோரைப் பார்வையிடச் சென்ற அவர் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் ராஜபக்சக்களை முழுமையாக நிராகரிக்க வேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு முறையான சுகாதாரமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்காமையே அவர்களுக்கு நோய்கள் ஏற்படப் பிரதான காரணமாகும்.

இது அவர்களின் அடிப்படை உரிமை மீறலாகும். இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

ராஜபக்சக்களுக்கு இன்றும் அதிகார பேராசை காணப்படுகிறது. இதுவரை கொள்ளையடித்து. அதில் திருப்தியடைய முடியாமலேயே அவர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெறுவோம் என்று பேசிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் முன்னெடுக்கும் இந்த முயற்சி ஒழுக்கமானதல்ல. இவ்வாறான செயற்பாடுகளுக்கு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் வரவேற்பிருக்காது - என்றார். (எ)

# நடத்துநர் இன்றி புதிய பஸ் சேவை!

விரைவில் அறிமுகம்

கொழும்பு, ஒக். 31

நாட்டில் பொதுப்போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடத்துநர் இன்றி இயங்கும் அதிநவீன புதிய பேருந்துச் சேவையை ஆரம்பிக்க போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும் தனியார் தொழில்நுட்பக் குழுவுக்கும் இடையில் அண்மையில் கலந்துரையா டல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே கைபேசி செயலி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பொதுப்போக்குவரத்து சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

முதற்கட்டமாக கொழும்பு நகரிலுள்ள கொழும்பு கோட்டை, கொம்பனித் தெரு, கொள் ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பொரளை, நகர மண்டபம் உட்பட பெரும்பாலான பிரதான நிலையங்களை உள்ளடக்கியதாக இதனை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப் பட்டுள் ளது.

இந்தப் பேருந்தில் எவ்வளவு தூரம் பயணித்தாலும் 200 ரூபா மாத்திரமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணமாக அறவிடப்படவுள்ளது. கையடக்கத் தொலைபேசியில் உள்ள செயலி மூலம் கட்டணம் செலுத்தப்படுவதால் இந்த சேவையின் போது நடத்துநர் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

**ரொட்டி தயாரிப்பாளர் தேவை**

**உணவகத்திற்கு** இரு ரொட்டி தயாரிப்பாளர்கள் **உடன் தேவை.** (Roddy master)

**076 679 5667**

**வண்ணார்பண்ணை மேற்கு**
**ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோவில்**

**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2022**

**இடம் :** ஆலய மண்டபம்

**நாள் :** 13-11-2022 ஞாயிற்றுக்கிழமை

**நேரம் :** பிற்பகல் 3.30 மணி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் படி இறையன்புடன் வேண்டுகின்றோம்.

கௌரவ செயலாளர்
ஆலய பரிபாலனசபை

# 40 ஆவது திருமண வாழ்த்து



## திரு.திருமதி பரமேஸ்வரன் மகேஸ்வரி

நல்லறம் காத்துநின்று இல்லற வாழ்வில் இன்று நாற்பதை தொடுகின்றீர். உங்கள் இருவரின் உள்ளமும் ஒளியுடன் விளங்குவதால் வாழ்ந்திடும் வாழ்க்கை வண்ணங்கள் காட்டுகின்றன.

சொல்லிலே சுந்தரம் சுகவாழ்வின் மந்திரமும் தந்தை என்ற சொல்லுக்கு இலக்கணமாய் வாழ்ந்து கொண்டு இருக்கும் எங்கள் தகப்பனுக்கும் அன்புடனும் கண்டிப்புடனும் வாழ்க்கையில் ஒழுக்கமும் பொறுமையும் மாந்தர்க்கு முக்கியம் என்று சொல்லி வாழ்ந்து காட்டி எங்களையும் வாழ வைக்கும் தாய்க்கும் பிள்ளைகளாகிய நாங்கள் பெரு உவகையுடன் இன்றும் என்றும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என மன நிறைவுடனும் இறைவன் துணையுடனும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

Best Wishes

**வாழ்த்துவோர்**
**பிள்ளைகள்: ஜீவிதா, கார்த்திகா**
**மருமக்கள்: விமல், சசிகரன்**
**பேரப்பிள்ளைகள்: கஸ்விகா, சர்வின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறைவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ முகாம் கிளிநொச்சி - புதுமுறிப்பில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ய-113)



வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றிபெற்ற வர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, வரணி மத்திய கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கந்தையா அருந்தவபாலன் அறக்கட்டளையால் மாணவர்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-159)



மாந்தை மேற்கு பிரதேசெயலகத்துக்கு உட்பட்ட வேட்டையாமுறிப்பு, மினுக்கன் ஆகிய கிராமங்களில் வசிக்கும் 250 குடும்பங்களுக்கு மன்னார் றோட்டறிக் கழகத்தால் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (ம-213)



சம்பத் வங்கி சங்கானைக் கிளையில் கணக்கு வைத்திருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, சம்பத் வங்கி சங்கானைக் கிளையில் அண்மையில் இடம் பெற்றது. (ம)



புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வசித்துவரும் எஸ். விஸ்வநாதனின் நிதிப்பங்களிப்பில், யாழ். இருபாலை வசந்தநிலா முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் கற்றல் உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-20)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் விஞ்ஞான ஆய்வுகூடமும், கணினி அறையும் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது. கல்லூரியின் பழைய மாணவன் கந்தையா விநாயகலிங்கம் நினைவாக அவரது குடும்பத்தால் 20 மில்லியன் ரூபா செலவில் இவை அமைக்கப்பட வுள்ளன. (ம-14-9)

## வளிமண்டலம் தளம்பல்நிலை

இலங்கையைச் சூழவுள்ள பகுதிகளில் கீழ் வளிமண்டலத்தில் தளம்பல்நிலை விருத்தியடைந்து வருகின்றது. எனவே, நாடு முழுவதும் மழை தொடரும் - என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப்பிரதேசங்களில் பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்றுள்ளது. (ம)



வலி. மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலை வீதிகளில் மாணவர்களுக்கு ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கும் விதமாக வலி. மேற்கு பிரதேச சபை சிறப்பு செயற்றிட்டத்தை மு[illegible] வர்கள் வீதியைக் கடக்கும்போது வீதிக்குக் குறுக்காக [illegible] பட்டிகளும் வலி. மேற்கு பிரதேசசபையால் வழங்கப்பட்டுள்ளது. (ம-14-27)



## வன்முறையை ஒழிப்பது தொடர்பான கருத்தமர்வு

மன்னார், ஒக். 31

மன்னாரில் அதிகரித்து வரும் சிறுவர், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது மற்றும் கையாள்வது தொடர்பான கருத்தமர்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

கருத்தமர்வில் சிறுவர், பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மெசிடோ நிறுவனத்துக்கான யுனெப்ஸ் திட்ட இணைப்பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் கருத்தமர்வு இடம்பெற்றது. (ம-14-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருந்தூர்மலை விவகாரம்

# இனங்களிடையே பிரிவினை உலகுக்குக் காட்ட முனைப்பு!

*தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கூறுகிறார்*

**முல்லைத்தீவு, ஒக். 31**

**குருந்தூர்மலை விவகாரத்தில் இனங்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தி நாட்டில் இனநல்லிணக்கம் இல்லை என சர்வதேசத்துக்கு காண்பிக்கும் நோக்கியிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர்.**

இவ்வாறு பெபிலியான சுனேத்ரா தேவி மஹா பிரிவெனா விகாரையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் அயோத்தி இராமர் கோவில் விவகாரத்தைப் போன்று குருந்தூர் மலை விவகாரத்தை பூதாகரமாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முனைகின்றனர்.

குருந்தூர்மலை விவகாரத்தின் ஊடாக இனங்களுக்கிடையில் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை பகைத்துக் கொள்ளக்கூடாது என குறிப்பிட்டு சிங்கள - பௌத்தர்களை உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாக்குகின்றனர்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தை நாட தீர்மானித்துள்ளோம். புத்தசாசனத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது - என்றார். (ச-இ)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தவப்பேறு சரவணை 22 . 05 . 1943



சிவப்பேறு யாழ்ப்பாணம் 10 . 11 . 2021

கடந்த ஆண்டு (10.11.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

அமரர் திரு.பாலசிங்கம் தங்கவேல்

எங்கள் அன்பு அப்பாவே இதயத் துடிப்பின் அருமருந்தே
காலம் செய்த கோலத்தினால் ஒவ்வொரு கணப் பொழுதும் துடிக்கின்றோம்

ஆண்டொன்று ஆனாலும் மனம் ஆற மறுக்கிறது - அப்பா
புன்னகை புரியும் உங்கள் முகம் தெரிகிறது தினம் தினம்!
உங்கள் ஒழுக்கம் நற்பண்பு மதிப்புகள் யாவும்
எங்கள் வாழ்வில் என்றென்றும் வழிகாட்டியாக இருக்கும்

மாதங்கள் பன்னிரண்டு ஆனாலும்
அழியாது எம் துயரம் மறையாத உங்கள் நினைவு!

மீண்டும் ஒரு பிறவி உண்டென்றால் உங்களுக்கு பிள்ளையாக பிறக்கும்
பேறு பெற வேண்டும்- அப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்....

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (31.10.2022) முற்பகல் 11.00 மணிமுதல் 2.00 மணிவரை இலங்கை வேந்தன் திருமண மண்டபத்தில் (இல.63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடைபெறும் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இல.539, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9175, 077 760 0444

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## தற்காலிக செப்பனிடல் இன்றிய வீதிகளால் பொதுமக்கள் சிரமம்

*வீதி அபிவிருத்தி அதிகாரசபை மீது பிரதேசசபை உறுப்பினர் கண்டனம்*

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் செல்லும் பிரதான வீதிகளாகக் காணப்படும் மானிப்பாய் - காரைநகர் வீதி, மாவடி - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதி ஆகிய மூன்று வீதிகளும் தற்காலிக செப்பனிடல் கூட இன்றி புனரமைக்கப்படாமல் உள்ளன.

இதனால் வீதிகளூடாகப் போக்குவரத்து செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வீதிகள், எந்தவொரு புனரமைப்புமின்றிக் காணப்படுகின்றமைக்கு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பொன்ராசா வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

வலி.மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அதன் போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று வீதிகளும் வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட மக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது.

கடந்த தீபாவளியன்று பெய்த மழையின் போது மாவடி வீதியில், ஆறு விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வீதியில் பயணிக்க வேண்டிய மோட்டார் சைக்கிளை வீதியிலே உருட்டிக்கொண்டு செல்கின்ற நிலை உருவாகியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காரைநகரிலுள்ள படகுபாதை சேவைக்கு மண்ணெண்ணெய் இல்லையெனத் தெரிவித்து மறுஅறிவித்தல் வரை ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையிலான கடல்வழிப் பாதை இயங்காது என்று அறிவித்தல் பலகையிடப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் படகுப் பாதையை இயக்க முடியாதெனில் காரைநகர் பிரதேசசபையிடம் கொடுங்கள் என்று கோரியிருந்தோம். ஆனாலும் படகுப்பாதையைக் கொடுப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்வரவில்லை.

மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு வீதிகளை உடனடியாகப் புனரமைக்கும் நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஒ-14-125)

## இலங்கையர் உயிரிழப்பு

தென்கொரியாவின் தலைநகர் சியோலில் இடம்பெற்ற ஹலோவீன் கொண்டாட்டத்தில் சன நெரிசலில் சிக்கி 151 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் இலங்கையரும் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்டியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம)



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் மாகாண மட்ட ரீதியில் இடம்பெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் யாழ்ப்பாணம் கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலய நாட்டார் பாடல் இசைக் குழு முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. (ச)

# இராணுவத்தின் சிறுவர் பூங்கா கலாசாரத்தைச் சீரழிக்கின்றது

## கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் வேழமாலிகிதன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 31

சிறுவர் பூங்காவின் ஊடாக கலாசார சீரழிவை இராணுவம் ஏற்படுத்துகின்றது என்று கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கரைச்சிப் பிரதேசசபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத்தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி நகரில் இராணுவத்தால் இயக்கப்படும் சிறுவர் பூங்காவில், பல சிறுவர்கள் இணைந்து சமூகத்துக்கு தகாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

அதை இராணுவத்தினர் தடுக்காது, கண்டுகொள்ளாமல் உள்ளனர். தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் பிள்ளைகள் தமது நன்மதிப்பை இழக்கும் நிலை காணப்படுகிறது.

இராணுவம் எமது கலாசாரத்தைச் சீரழிக்கும் எண்ணத்துடனே இவ்வாறு செயற்படுகின்றது. உள்ளூராட்சி சட்டத்தினடிப்படையில், இவ்வாறான பூங்காக்கள் உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும். மாறாக இராணுவம் தமது முகாம்களில் அமைத்து கலாசாரத்தைச் சீரழிக்கின்றது.

உடனடியாக பூங்கா பிரதேசசபையிடம் கையளிக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கையை மாவட்டச்செயலர் மேற்கொள்ளவேண்டும். தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தமது இராணுவ முகாமுக்குள் இவ்வாறு பூங்காவை அமைத்துள்ளனர். தேசிய பாதுகாப்புக்கு எதிராக எம்மால் எந்தவொரு நீதிமன்ற வழக்குத் தொடர முடியாது - என்றார். (ஒ-14...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனம் விதை நடுகை ஆரம்பம்



முல்லைத்தீவு, ஒக். 31

பனை அபிவிருத்திச் சபை மற்றும் தனியார் நிறுவனங்களும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பனம் விதைகள் நடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மழை காலங்களில் வெள்ள இடர் பாதிப்பை தவிர்க்கும் வகையில் 35 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்வதற்கு இடத்தெரிவு மேற்கொள்ளப்பட்டு இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர் க.விஜிந்தன், பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர்.சசிகுமார், முல்லை கிழக்கு ப.தெ.வள அ. கூ.சங்க பொது முகாமையாளர் எஸ்.ஜெயரூபன், மாவட்ட கடலோர பாதுகாப்பு உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-ஒ-இ)



நல்லூரில் நடைபெற்ற சூரன்போர் பதிவுகள்

### தேர்தலை...

போல, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங் களை அரசாங்கத்துக்கு பிரயோகிக்கும் -இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பி னருமான டலஸ் அழகப்பெரும தெரி வித்தார்.

தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கு தெரிவுக்குழு வொன்றை அமைக்குமாறு நீதி அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே டலஸ் அழகப்பெரும இவ்வாறு கூறினார்.

'திட்டமிட்ட-அடிப்படையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதன் ஓர் அங்கமாகவே தெரிவுக்குழு நாட கம் அரங்கேற்றப்படுகின்றது. ஈரானில் வாழ்ந்த நபரொருவர் 5 தசாப்தங்கள் வரை குளிக்கவில்லை. ஏனெனில் தலையில் தண்ணீர் பட்டால் இறந்து விடுவோம் என அவர் நம்பியுள்ளார். இறுதியில் உலகம் அவரை, அழுக்கான மனிதன் என அடையாளப்படுத்தியது. அது போலவே தேர்தலை நடத்துவதற்கு தற்போதைய அரசாங்கமும் அஞ்சுகின் றது. அதற்கு நாம் இடமளிக்கமாட் டோம். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் *-என வும் டலஸ் குறிப்பிட்டார்.

(அ-ஒ-44)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இராசையா குமாரசுவாமி**

அன்னை மடியில் 24.04.1938 — இறைவன் அடியில் 03.11.2019

மூன்றாண்டு நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அப்பா
உங்களை நினைக்காத நொடிகளில்லை

அன்பினால் பண்பினால் நட்பினால்
ஆளுமையினால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எங்கள் தந்தையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்

பாடசாலை வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி

மனைவி மற்றும்
பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்



**அமரர் பத்மராணி மகேந்திரராஜா**

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் ஐயா கடையடி, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் பத்மராணி மகேந்திரராஜா 30.10.2022 (ஞாயிற்றுக்கிழமை) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நல்லதம்பி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மகளும் பொன்னையா, பிள்ளையம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் மகேந்திரராஜாவின் அன்பு மனைவியும் ஈசராஜ், பதஞ்சலிராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் குணபாலசிங்கம், ராஜகுலசிங்கம், புஸ்பராணி, இரத்தினசிங்கம், பூபாலசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கணேசன் மற்றும் இலக்குமிதேவி, புனிதமலர், தெய்வேந்திரராஜா (காந்தி), இரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2022) திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.மகேந்திரராஜா (கணவர்) - 0772557761
ம.ஈசராஜ் (மகன்) - 0773655716
ம.பதஞ்சலிராஜ் (மகன்) - 0772808878



## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 05 . 1932



இறப்பு 30 . 10 . 2022

**இலங்கையர் விசுவலிங்கம்**

(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி (ஆமி விசுவலிங்கம்)

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கையர் விசுவலிங்கம் (ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி (ஆமி விசுவலிங்கம்) நேற்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலங்கையர் தங்கச்சிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் குணசீலன் (சுவிஸ்) அவர்களின் அன்புத் தந்தையும் செந்தில் செல்வியின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் குணாலினி (சுவிஸ்), தர்சிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, பண்டாரம், அன்னப்பிள்ளை, பொன்னம்மா, சங்கரப்பிள்ளை, நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் நாகம்மா(மணி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(01.11.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரன்போரில் வாய்த்தர்க்கம் வாள்வெட்டில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 31

வட்டுக்கோட்டை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வட்டுக்கோட்டை சங்கரத்தை பங்குரு முருகன் ஆலயத்தில் இளைஞர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆலயத்தில் நேற்றுமாலை சூரன்போர் இடம்பெற்ற நிலையில் இரண்டு இளைஞர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் அது வாள்வெட்டாக மாறியுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்காகி வட்டு. கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த நவரத்திராசா ஜனந்தன் (வயது - 33), வட்டு மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் கஜானந்தன் (வயது -38) ஆகிய இரு இளைஞர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ-125)

# திடீரென மயங்கி விழுந்து மீன் வியாபாரி மரணம்!

முல்லைத்தீவு, ஒக். 31

முல்லைத்தீவில் வீதியில் சென்று கொண்டிருந்த மீன் வியாபாரி ஒருவர் திடீரென மயங்கி விழுந்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

குரவில் - உடையார் கட்டுப்பகுதியைச் சேர்ந்த ஆதிமுருகன் யோகராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு - செல்வபுரம் பகுதியில் அவர் மீன்களைக் கொள்வனவு செய்வதற்காக பயணித்துக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாரடைப்பு காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளாரென மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-இ)

# பொருளாதார வளர்ச்சியில் சவால்விடும் இந்தியா

புதுடில்லி, ஒக். 31

கொரோனாப் பேரிடர் காரணமாக மேற்குலக நாடுகளின் பொருளாதாரமே ஆடிப்போயுள்ள நிலையில், இந்தியா ஓரளவு அதனைத் தாக்குப்பிடித்து பொருளாதாரத்தில் முன்னேறி வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

அமெரிக்கா, கனடா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. பல தசாப்தங்களுக்குப் பின்னர் அந்த நாடுகளில் பொருள்களின் சடுதியான விலையேற்றம் இடம்பெற்றுள்ளதோடு, அன்றாடம் திரட்டும் பணத்தில் வாழ்க்கை நடத்துபவர்கள் மிகுந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

ரஷ்யா - உக்ரைன் போரும் உலகப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உலக நாடுகள் ரஷ்யாவை எதிர்க்கவேண்டும் என்பதற்காக உள்நாட்டு பொருளாதாரத்தில் மிகக் கடுமையான நிலைமை காணப்பட்டாலும், உக்ரைனுக்காக பில்லியன் கணக்கில் வாரியிறைக்கின்றன.

இந்த விடயத்தில்இந்தியா தன்னை தற்காத்துக்கொண்டுள்ளது. இந்தியா, போர் உள்ளிட்ட வன்முறைக்கலாசாரம் நீடிக்க கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றபோதும், மேற்குலகின் பக்கமோ அல்லது ரஷ்யாவின் பக்கமோ சாயாமல் நடுநிலையாக, அணிசேராக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது.

இந்தியாவின் இந்த ஆண்டில், ஆண்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 சதவீதத்தில் இருந்து 9.5 சதவீதமாக மூடிஸ் நிறுவனம் உயர்த்தியுள்ளது. இந்தியா 2023ஆம் ஆண்டில் 5.5 சதவீத பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருக்கும் என்றும் மூடிஸ் உறுதி செய்துள்ளது.

2022ஆம் ஆண்டின் மத்திய வரவு - செலவுத்திட்டத்தில் நாட்டின் உள்நாட்டு வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2022 - 23 நிதியாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.9 சதவீதமாகவும், மூலதனச் செலவினங்களுக்கான ஒதுக்கீடு 36 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இதன்மூலம் தனியார் முதலீடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, அதற்கான பகிரங்கப் பேச்சும் ஆரம்பமாகிவிட்டது.

இந்தியாவில் கடந்த மூன்று மாதங்களில் நுகர்ச்சி வீதம் குறைவடைந்துள்ளது. இந்த நிலைமையானது நீடிக்குமாக இருந்தால் இந்தியா தெற்காசிய நாடுகளுக்கு மத்திரமல்ல உலக வல்லாதிக்க நாடுகளுக்கும் முன்னுதாரணமாகவே இருக்கும். (அ-ஒ-இ)

## மனோ...

இ.தொ.காவின் பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான் நெகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னை அன்புடன் வரவேற்ற சகோதர அரசியல் கட்சி மற்றும் தொழிற்சங்கங்களுக்கு நன்றிகள். நான் விருந்தாளி அல்ல. உங்களில் ஒருவன். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள். நான் இங்கு வந்தது குறித்து பலருக்கு பலவித உணர்வுகள் இருக்கலாம். ஆனால், எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியம். அதற்கான ஆரம்பமே இது. வெறுப்பையும் எதிர்ப்பையும் வைத்து அரசியல் செய்ய முடியாது. நீடிக்கவும் முடியாது என்பது எனது சிறிய அரசியல் வாழ்வில் நான் படித்த அனுபவம். அன்பாலும், ஒன்றிணைவாலுமே எல்லாம் சாத்தியப்படும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எனக்குச் சிறந்த வழிகாட்டி. தந்தை ஸ்தானத்தில் இருந்து என்னை வழிநடத்துகின்றார். திகாம்பரமும் எனது மூத்த சகோதரன் போன்றவர் - என்றார்.

இங்கு உரையாற்றிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், மலையகத் தமிழர்களின் எழுச்சி, வளர்ச்சியில் இரட்டைகுழல் துப்பாக்கியாகச் செயற்படுவோம் என இ.தொ.காவுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். அது தற்போது சாத்தியப்பட்டுள்ளது. மலையகம் இன்று ஒளிர்கிறது. ஒரு சிங்கமாக, புலியாக எழுச்சி பெறுகின்றது. நாங்கள் உழைக்க மட்டும் இங்கு வரவில்லை, ஆளவும்தான் வந்துள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

## சுமந்திரனை...

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று காலை நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சி முடிவு என்பது மத்திய குழு அழைக்கப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவு எடுக்கப்படும். அந்த முடிவே இறுதியான முடிவாக இருக்கும். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடைய கருத்துக்கள் இப்போது தன்னிச்சையாக அமைகின்றன. அது கட்சி முடிவு அல்ல. இவ்வாறான முடிவுகள் கட்சிக்கு மட்டும் பாதிப்பு அல்ல. தமிழ் மக்களுக்கும் மண்ணுக்கும் நமது நிலத்துக்கும் மொழிக்கும் இது பாதிப்பே.

22ஆவது சட்ட வரைவு நாடாளுமன்றில் அண்மையில் வாக்கெடுப்புக்கு விட்டபோது சுமந்திரன், வாக்களிக்காமல் வெளியேறிச் சென்றுவிட்டார். இந்த முடிவு கட்சியில் எப்போது எடுக்கப்பட்டது? அவரே தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கான தெரிவு நாடாளுமன்றில் இடம்பெறும்போது வாக்களிப்பில் நடுநிலை வகிப்பது முதுகெலும்பு இல்லாதவர்களின் செயல் என சுமந்திரன் கூறினார். அவ்வாறு கூறியவர் 22 ஆவது சட்டத்திருத்தத்துக்கான வாக்களிப்பை புறக்கணித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்ப்பதற்காகவே சுமந்திரன் 22ஆவது சட்டத்திருத்தத்துக்கான வாக்களிப்பை புறக்கணித்தார்.

சம்பந்தன் எப்போது விலகுவார். அந்தக் கதிரையை பிடிப்போம் என்று பலர் பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். நான் அவ்வாறு இல்லை. கட்சிக்குள் கொள்கைகள் தமிழ்த் தேசியத்துக்கு எதிராக மாறுமாக இருந்தால், நான் கட்சியை விட்டு வெளியேறுவேன்.

கட்சித் தலைமை சரியான தீர்மானங்களை எடுக்காவிட்டால், இவ்வாறு பலர் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து, கட்சியையும், மக்களையும் திசை திருப்பிவிடுவார்கள். கட்சியில் கூட்டுப் பொறுப்பு இருக்கவேண்டும். அந்தக் கூட்டுப் பொறுப்பின் முடிவுகளுக்கு அனைவரும் கட்டுப்படவேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் சுமந்திரனின் தன்னிச்சையான முடிவால், கட்சி கீழ் நோக்கி சென்றுகொண்டு இருக்கிறது என்பதை கடந்தபல ஆண்டுகளாக அவதானித்துக்கொண்டு வருகின்றேன். இது தனிப்பட்ட கட்சி அல்ல. இது மக்களுடைய கட்சி. இது மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சி. அந்தக் கட்சியினுடைய அங்கத்தவர்கள் யாராக இருந்தாலும் சரி கட்சித் தலைமையை மதிக்கவேண்டும்.

என்னுடைய சொத்துக்களை கௌரி சங்கரி தவராசா எனும் அறக் கட்டளை மூலம் மக்களுக்காக வழங்கப்போகின்றேன். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தேசியப் பட்டியல் ஆசனத்தைத் தருமாறு நான் கேட்கவில்லை. ஆனால், தேசியப் பட்டியலில் உள்வாங்கப்பட்டேன். தேசியப் பட்டியலில் எனது பெயர் முதலாவதாகக் காணப்பட்டது. என்றாலும், அடுத்தநாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகங்களை அழைத்து, அம்பிகா சற்குணநாதனுடைய பெயர் முதலாவதாக உள்வாங்கப்பட்டுள்ளது என அறிவித்தார்.

பின்னர் சுமந்திரன், சம்பந்தனை சந்தித்து ஒரு முடிவு எடுத்து தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தவராசா கலையரசனுக்கு கொடுப்பதாகத் தீர்மானித்து அதனையும் ஊடகங்களை அழைத்து அறிவித்தார். மாவை சேனாதிராசா நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடாது என்பதில் அவர் தீவிரமாக இருந்தார்.

இவ்வாறு அவரது தனிப்பட்ட தீர்மானங்கள் கட்சியைப் பெரிதும் பாதித்துக் கொண்டிருக்கின்றன. அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், சுமந்திரன் எடுக்கும் முடிவுகளை எதிர்போம் என்று பகிரங்கமாகக் கூறியிருந்தார். அதனை நான் ஆதரிக்கின்றேன் - என்றார். (அ-ஒ-26-125)

## கரைவலை...

போயிருந்தார். அவரை தேடும் நடவடிக்கையில் கடற்றொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

காணாமற்போன மீனவரின் சடலம், கொக்கிளாய் கடற்கரையில் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது. சடலத்தை மீட்ட மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கொக்கிளாய் பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளனர். இவர் நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அறியமுடிகின்றது. (அ-ஒ-19)

## வடக்கு...

யாழ்ப்பாணத்தில் அவரது அமைச்சு ஊடாக முன்னெடுக்கவுள்ள நடமாடும் சேவையில் கலந்துகொள்ள வந்துள்ள அமைச்சர் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்படி விடயத்தை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை - விற்பனை யாழ்ப்பாணத்தில் - வடக்கில் அதிகரித்துள்ளது. எனது யாழ்ப்பாணப் பயணத்தின்போது இது தொடர்பிலும் ஆராயவுள்ளேன். பொலிஸார் உள்ளிட்ட பொறுப்புக்கூறும் சகல தரப்பினருடனும் சந்திப்பு நடத்தவுள்ளேன்.

வடக்கு மாகாணத்தில் இளைஞர்கள் உயிர்கொல்லிப் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருவதால் மிகப் பெரும் சமுதாயப் பிரச்சினை உருவாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல் பெருமளவான உயிர்கொல்லி போதைப் பொருள் முகவர்கள் வடமாகாணத்தின் ஊடாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் உயிர்கொல்லி போதைப்பொருளைக் கடத்தி வருகின்றனர்.

இதனை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் - என்றார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

பெரும்பாலோனோர் இந்தக் காட்சியை நேரில் பார்வையிட்டனர். அத்துடன் சமூக வலைத்தளங்களிலும் காணொலியைப் பதிவு செய்து பகிர்ந்தனர்.

கடற்பிரதேசங்களில் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவது வழமை. கடற் பிரதேசத்துக்கு மேல் ஏற்படும் திடீர் உயர் அமுத்த மேற்காவுகை காரணமாக வானை நோக்கி நீர் பல கன அடிக் கணக்கில் முகிலால் உறிஞ்சப்படும். இவ்வாறு உறிஞ்சப்படும்போது அந்தப் பகுதியிலுள்ள மீன்கள், மனிதர்கள் என எவை அகப்பட்டாலும் அமுத்தம் காரணமாக வானை நோக்கி இழுத்துச் செல்லப்படும். இவ்வாறு இழுத்துச் செல்லப்படும் மீன்களே, மழையின்போது சில இடங்களில் விழுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-26)

## உணவு...

சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேலசம்பத் தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை குறைந்துள்ளமை மற்றும் கடந்த காலங்களில் அதிகரித்துக் காணப்பட்ட கோழி இறைச்சி மற்றும் மீன் என்பவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தால் உணவுகளின் விலைகளும் குறைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - எதிர்வரும் பண்டிகைக் காலம் மற்றும் பல விடயங்களைக் கருத்திற்கொண்டு புறக்கோட்டை மொத்த சந்தையில் சீனி, பருப்பு மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக, அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளன.

290 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் சீனியின் மொத்த விலை 225 ரூபாயாகக் குறைந்துள்ளதுடன், 265 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கோதுமை மாவின் மொத்த விலை 250 ரூபாவாகக் குறைந்துள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## அமெரிக்காவும்...

கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தின் புதிய கட்டடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டபோதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த ஆண்டு சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளும் 75 ஆண்டு நிறைவைக் காணவுள்ளன. ஆனால், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளுக்கு நீண்ட வரலாறு உண்டு.

சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளைத் திறக்க மிஷனரிகள் வந்தனர். மேலும் இலங்கையில் முதல் மருத்துவமனையை நிறுவியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

போர்க் காலத்தில் யாழ்ப்பாணம் மக்களுக்கு அந்த மருத்துவமனை பெரும் சேவையை ஆற்றியது. இது ஒரு கிறிஸ்தவ மிஷனரி இயக்கம் மட்டுமல்ல. கேணல் ஒல்காட் ஆற்றிய சேவையை நாம் அனைவரும் அறிவோம். அவர் ஆரம்பித்த ஆனந்தாக் கல்லூரியில் கற்ற பல மாணவர்கள் இங்கும் உலகம் முழுதும் சிதறிக் கிடக்கின்றனர்.

2001ஆம் ஆண்டு நான் பிரதமராக இருந்தபோது ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் வழங்கிய ஆதரவைக் கண்டிப்பாக இங்கு குறிப்பிட வேண்டும்.

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கும் விடுதலைப்புலிகள் அமைப்பைக் கட்டுப்படுத்தவும் சுனாமி இடரால் நாம் பாதிக்கப்பட்டபோதும் அவர் ஆற்றிய விசேட பங்களிப்புக்களை இங்கு நினைவு கூருகின்றேன்.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் ஜனாதிபதி கிளிண்டன் ஆகியோர் எமக்கு ஆதரவு வழங்க இலங்கை வந்தனர். இது நீண்ட கால நட்புறவு, ஜனநாயகக் கொள்கைகளை சீர்திருத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சி மற்றும் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் நான் பிரதமராக இருந்தபோது அமெரிக்காவின் ஆதரவு கிடைத்தது.

இந்த நெருக்கடியான நேரத்தில் எங்களுக்கு ஆதரவளித்த ஜனாதிபதி பைடனுக்கு நான் நன்றி சொல்லவேண்டும். உங்கள் ஆதரவு இல்லாமல் நாங்கள் பெரும் போகத்தை வெற்றிகரமாக முன்னெடுத்திருக்க முடியாது - என்றார்.

(அ-ஒ-22)

## கடலட்டைப்...

பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலை நூலக கேட்போர் கூடத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம். றியாஷ் அகமட் எழுதிய 'கடல் அட்டை வளர்ப்பும் யாழ். தீவக கடல்களின் அரசியலும் சூழலியலும்' நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடலட்டைப் பிரச்சினை என்பது மீன்பிடி சமூகத்துக்கு மாத்திரம் உரியதன்று.

கடலிலும் சரி கடலுக்கு வெளியிலும் சரி கடல் வாழ் உயிரினங்களின் பண்ணைகளை அமைப்பதை நான் அடியோடு நிராகரிக்கின்றேன். கடலுக்குள்ளே நாங்கள் கூடுகளை அமைத்து அல்லது பண்ணைகளை அமைத்து கடலட்டைகளை வளர்த்தாலென்ன, பண்ணைகளை அமைத்து இறாலை வளர்த்தாலென்ன, அல்லது கடலுக்கு வெளியே தொட்டிகளை அமைத்து கடல் நீரை கடலில் இருந்து வெளியே கொண்டு வந்து இறால் பண்ணைகளை அமைத்தாலென்ன அல்லது அட்டைப் பண்ணைகளை அமைத்தாலென்ன அவை முற்றுமுழுதாக இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகளாகவே கருதப்படும்.

எங்களுக்கு அது குறுகிய காலத்தில் இலாபம் தரலாம். எங்களை வழி தொடரும் தலைமுறைகள் யாவரும் வளங்களை பகிர்ந்து உண்ணுவதில் நாங்கள் மாத்திரம் அல்ல உலகத்தில் உள்ள அத்தனை உயிரினங்களும் பங்கிடுவதற்கான வளங்களையும் இங்கு கொண்டிருக்கின்றபொழுது, ஒரு சிலரின் பொருளாதாரப் பேராசைக்காக வளங்களை நுகரக்கூடிய செயன்முறைகள் என யாவற்றுக்கும் எதிரான கண்ணோட்டம் எங்களுக்கு இருக்கவேண்டும்.

மிகத் தெளிவான முடிவாக நாங்கள் இறால் பண்ணைகளையும் கடலட்டைப் பண்ணைகளையும் நிராகரிக்க வேண்டும்.

தற்பொழுது இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையில் சீனாவா? இந்தியாவா? என்ற பேசுபொருள் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் கூட இது சீனாவாக இருந்தால் என்ன இந்தியாவாக இருந்தால் என்ன இங்கிலாந்தாக இருந்தால் என்ன, எந்த நாடு இந்தத் திட்டத்தை முன்னெடுத்தாலும் அதனை எதிர்ப்பவனாகவே நான் செயற்படுவேன். இன்றைய உலக பயங்கரவாதமான காலநிலை மாற்றங்களுக்குரிய மிகப்பெரிய காரணமே விலங்குப் பண்ணைகள்தான்.

கடற்றொழிலாளர்களை விடவும் கடற்தொழிலுடன் எந்தவிதமான சம்பந்தம் இல்லாதவர்களும் கடலட்டைப் பண்ணைகளில் முதலீடு செய்துள்ளார்கள். தற்பொழுது கடற்றொழிலாளர்கள் கடலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றார்கள்.

கடலட்டைப் பண்ணை அமைப்பது தொடர்பாக சந்தேகங்கள் எழாமல் இல்லை. எமது குடாநாட்டுக் கடற்பரப்புத்தான் கடலட்டை வளர்ப்புக்கு பொருத்தமான கடற்பரப்பா? என்று கேட்டால் அதற்குப் பதில் இல்லை. இலங்கையில் இதற்குப் பொருத்தமான ஏராளமான இடங்கள் உள்ளன. அங்கும் போய் தொழில் செய்யலாம். ஆனால், அவர்களுக்குத் தேவைப்படுவது எங்களுடைய இடங்கள்தான்.

ஊடகங்களினுடைய கருத்துப்படி சீன நாட்டவர்கள் இங்கு தங்கி இருந்து தொழிலை மேற்கொள்கின்றார்கள். இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்திருப்பதால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது.

சீனாவுக்கும் அமெரிக்காவுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இலங்கை இருக்கலாம். ஆனால், இந்தியாவுக்கு கேந்திர முக்கியத்துவத்துடன் அதன் பாதுகாப்புடன் தொடர்புடைய ஒரு பிரச்சினையாக இது காணப்படுகின்றது.

பிற நாடுகள் கொண்டு வந்து தருகின்றார்கள் என்பதற்காக அனைத்துக்கும் நாங்கள் தலையசைப்போமாக இருந்தால் எங்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியானதாகவே அமையும்.

கடலட்டைப் பண்ணை தொடர்பாக எங்களுடைய கடற்றொழில் அமைச்சருடன் பேசி எந்தவிதமான பலனும் கிடைக்கப் போவதில்லை. எங்களுடைய கடற்றொழில் அமைச்சராலேயே கொடியசைத்து இழுவைப்படகு தொழில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த இழுவை தொழில் உயிரினங்களை அழிவுக்கு உட்படுத்தும். ஆனால், இதனை யார் செய்வது? எந்த அரசாங்கம் வந்தாலும் அமைச்சராக இருக்கப் போகின்ற அமைச்சர் தான். இந்த அரசினால் எங்களுக்கு உரிய தீர்வு கிடைக்கப் பெறுமா? என்றால் இல்லை. குறைந்த பட்ச அதிகாரத்தைக் கொண்டுள்ள மாகாண சபை கூட தற்பொழுது இயங்குவதாக இல்லை.

மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு இந்தத் தீர்வுகள் கிடைக்கப்பெறும் என்றாலும் அதுவும் நிச்சயமாக இடம் பெறாது. மாகாண சபை இயங்கிய பொழுது எமக்கான பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியவில்லை.

தன்னாட்சி அதிகாரம் ஒன்று தான் எமக்கான தீர்வைப் பெற்றுத்தரும். எங்களுடைய சுற்றுச் சூழலுக்குப் பாதிப்புத் தருகின்ற அனைத்துத் திட்டங்களையும் நாங்கள் நிராகரிப்போம்.

தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யக்கூடிய தன்னாட்சி அதிகாரமே எமக்கான தீர்வு - என்றார்.

(அ-ஒ-125)

**காணி விற்பனைக்கு**

நல்லூர் நாவலர் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 601 1135**

அமெரிக்க லொத்தர் இலவச விசா

இன்னும் ஏழு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஓரே ஒரு அரிய சந்தர்ப்பம்

**V2 Travels**

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

**0768226244**

கிளி / அக்கராயன் மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்

**ஆண்டுப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத்தெரிவும்**

**- 2022 -**

- காலம் : 07.11.2022 திங்கட்கிழமை
- நேரம் : முற்பகல் 10.00 மணி
- இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
பழையமாணவர் சங்கம்,
கிளி / அக்கராயன் மகா வித்தியாலயம்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

**077 986 5457**

**077 814 7389**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021 493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.